[1973 ஆகஸ்ட் 14

New Buildings for Arts College at Tiruttani

*125 Q.—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that tenders have been called for, for the construction of new buildings for Sri Subramanyaswami Arts College, Tiruttani; and

(*b*) if so, when the work will be commenced?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ பரந்தாமன் : தலைவரவர்களே, திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கலைக் கல்லூரி கடந்த இரண்டு ஆண்டுகளாக அங்கே நடந்து கொண்டு வருகிறது. ஆனால் அதற்குப் போதிய கட்டடங்கள் இல்லை. அதற்கு தேவஸ்தானம் போதிய பணம் இன்னும் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாக அந்த தேவஸ்தான அதிகாரிகளோடு தொடர்புகொண்டு போதிய பணத்தைப் பெற்று, புதிய கட்டடங்களை உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, திருத்தணியில் கல்லூரி வேண்டுமென்று கேட்கிறபோது 5 லட்ச ரூபாயும் 40 எக்கர் நிலமும் தரவேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டது. அந்த 5 லட்ச ரூபாயை குழுவினரோ அல்லது தேவஸ்தானமோ தருவது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்போது 2 லட்சம் ரூபாய் தந்து இருக்கிறார்கள். இன்னும் 3 லட்ச ரூபாய் தரவேண்டியிருக்கிறது.

நிலத்தைப் பொறுத்தவரையில் அங்கேயிருக்கின்ற ஆர்.டி.ஓ. அவர்கள் 23.94 எக்கர் பரப்பளவை 2—4—73 அன்று கல்லூரி முதல்வரிடத்தில் ஒப்படைத்து இருக்கிறார்கள். ஆனால் கட்டடங்கள் எழுப்புவதற்கும், இன்னும் மற்ற வேலைகள் செய்வதற்கும் அந்த 3 லட்சம் ரூபாய் வரவேண்டும். அதை அரசு வற்புறுத்திக்கொண்டு இருக்கிறது. விரைவில் அந்தப் பணம் வந்து சேர்ந்தால் திட்டங்கள் தீட்டி, கட்டடங்கள் கட்டும் முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, கட்டடங்கள் கட்டும் வரையில் டிகிரி கோர்ஸ் வராது என்று சொல்கிறார்கள் ஆகவே, விரைவில் கட்டடங்கள் கட்ட அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கோரியபடி முதல் ஆண்டே 5 லட்ச ரூபாய் கொடுத்திருந்தால், இரண்டு ஆண்டுகளில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கும். டிகிரி கோர்சும்

1973 ஆகஸ்ட் 14]

வந்திருக்கும். முழுப் பணம் கட்டினாலொழிய டிகிரி கோர்ஸ் வராது. அந்த 5 லட்ச ரூபாயையும் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உதவி செய்து, சிபார்சு செய்து பெற்றுத்தந்தால், அதற்குப் பிறகு டிகிரி கோர்ஸ் பற்றி எண்ணலாம். முழுத் தொகை வராத வரையில் டிகிரி கோர்ஸ் தரக்கூடாது என்று கொள்கை வைத்திருக்கிறோம்.

கூறைநாடு பகுதியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

*126 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர், தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம், கூறைநாடு பகுதியில் பெண்களுக்கு தனியே ஒரு உயர் நிலைப்பள்ளி அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

நாகூர் போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகைகள்.

*127 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நாகூர், ஏர்வாடி போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நாகூருக்கு நிறைய முஸ்லீம்கள் வருகிற காரணத்தால், இனிமேலாவது சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது செயற்குறிப்பு இல்லை என்று சொன்னேன். ஏராளமான மக்கள் கூடுகிற எல்லா இடங்களிலும் சுற்றுலா மாளிகை வேண்டுமென்ற பேரவா இருந்தாலும் அதை நிறைவேற்றிக்கொள்ளத்தக்க அளவிற்கு நிதி வசதி, மற்ற வசதிகள் இல்லை. இருக்கிற நிதி வசதியை வைத்துக்கொண்டு, மற்ற நாட்டவர், வெளி மாநிலங்களிலிருந்து அடிக்கடி வந்து போகும் கொடைக்கானல், குன்னூர், ஊட்டி, குற்றாலம் போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகை கட்டவேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் படிப்படியாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும். இப்போது சுற்றுலா மாளிகை கட்டும் முயற்சி இல்லையென்றாலும், நாளடைவில் வரலாம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, நாகூர், ஏர்வாடி, முத்துப்பேட்டை போன்ற இடங்களுக்கு முஸ்லீம்கள் மட்டும் வரவில்லை, இந்துக்களும் வருகிறார்கள். எல்லோருக்கும் தங்குவதற்கு வசதி இல்லாமல்